**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ நிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

**தேதி : 21.11.2025**
**வணிக அசல் வழக்கு எண் - 399/2024**
**வா.சா.1 - திரு. பாலாகுமார்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> - தொடர்ச்சி**

தாவா தாக்கல் செய்து கையொப்பம் செய்த R. சுவாமிநாதன் இடத்திற்கு தான் நீங்கள் தற்சமயம் பணியாற்றி வருகிறீர்களா என்றால் இல்லை, R. சுவாமிநாதன் என்பவர் General Manager ஆக பணியாற்றினார், நான் Senior Manger Accounts பதவி வகிக்கிறேன். தற்சமயம் வாதி நிறுவனத்தில் R. சுவாமிநாதன் இடத்தில் யார் பணியாற்றி வருகிறார் என்றால் இராமகிருஷ்ணன் என்பவர் General Manager ஆக உள்ளார். உங்கள் நிறுவனத்தில் முத்துக்குமார் என்பவர் பணியாற்றி வருகிறாரா என்றால் ஆமாம் அவர் சென்னை பகுதியில் Customer support ல் உள்ளார். 2017ல் வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்திற்கிடையே ஏற்பட்டிருந்த பரிவர்த்தனை சமயத்தில் முத்துக்குமார் தான் Customer supportல் இருந்தார் என்றால் சரிதான். முத்துக்குமார் என்பவர் தான் பிரதிவாதி அனுப்பிய பொருட்களின் Invoices, GSP, Packing list ஆகியவற்றை சரிபார்த்து Freight clearances க்கு பார்த்துக் கொள்வார் என்றால் சரிதான், அவருடன் அந்த சமயத்தில் கிருஷ்ணவேணி என்பவரும் இருந்தார். பிரதிவாதி அனுப்பிய பொருட்கள் Jet Airways மூலமாக தான் UK க்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 02.02.2017 தேதியிட்ட Invoice நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்றால் எங்கள் நிறுவனத்தின் Invoice மாதிரி தான் உள்ளது, அலுவலகத்தில் பார்க்க வேண்டும்.

02.02.2017 தேதியிட்ட வாதி நிறுவனத்தின் Invoice அசல் **பி.சா.ஆ. 1** ஆகும்.

என்னிடம் காட்டப்படும் 21.04.2017 தேதியிட்ட வா.சா.ஆ.6 Invoice நீங்கள் பிரதிவாதி நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்தது என்றால் சரிதான், தாவா சம்பந்தப்பட்ட Invoice என்ற காரணத்தினால் அதன் எண் எனக்கு தெரியும். பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள பொருட்களை பிரதிவாதி நிறுவனம் சார்பாக வாதி நிறுவனம் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள Mackays, UK க்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அனுப்பப்பட்டுள்ளதாக கண்டுள்ளது, அலுவலக

ஆவணங்களை பார்க்க வேண்டும். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் பி.சா.ஆ.1 Invoice ஆவணம் அசலாக இருந்தால் தாக்கல் செய்ய இயலும். பிரதிவாதி நிறுவனத்தின் 27.01.2017 தேதியிட்ட Invoice அடிப்படையில் தான் பி.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டுள்ளது, அதன் விவரம் பி.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்படி தான் கண்டுள்ளது, அலுவலக ஆவணங்களை பார்க்க வேண்டும். பி.சா.ஆ.1 ன் அடிப்படையில் எங்கள் நிறுவனத்திற்கு சேர வேண்டிய Freight Charges ரூபாய்.45,577/- என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகையை பிரதிவாதி நிறுவனம் கடந்த 14.03.2017 ல் வாதி நிறுவனத்திற்கு IDBI காசோலை மூலமாக செலுத்தி உள்ளது என்றால், அப்படி தான் கண்டுள்ளது, அலுவலக ஆவணங்களை பார்த்து தான் சொல்ல இயலும்.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.11.21 17:36:19 +0530

**Judge,**
**Commercial Court,**
**(Senior Civil Judge Cadre),**
**Coimbatore.**